# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 248 | 4 Pages | 11.4.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 248 | 4 பக்கங்கள் | 11.4.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கு: பாஜக எம்.பி. சாத்வி பிரக்யா கட்டாயம் ஆஜராக சிறப்பு நீதிமன்றம் உத்தரவு



மகாராஷ்டிரா, ஏப். 11

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தின் மாலேகான் பகுதியில் உள்ள மசூதி அருகே கடந்த 2008ம் ஆண்டு செப்டம்பர் 29ம் தேதி, இருசக்கர வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 6 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக பெண் சாமியார் பிரக்யா சிங் தாகூர் (தற்போதைய பாஜக எம்பி), ஓய்வுபெற்ற ராணுவ மேஜர் ரமேஷ் உபாத்யாய் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர். மும்பையில் உள்ள என்.ஐ.ஏ., சிறப்பு நீதிமன்றத்தில், இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில், மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்ந்து ஆஜராகாமல் இருக்கும், பாஜக எம்.பி. பிரக்யா தாக்கூருக்கு மும்பை என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

உடல்நலக்குறைவால் நீதிமன்றத்தில் ஆஜராகமுடியவில்லை என பிரக்யா தாக்கூர் தரப்பு வழக்கறிஞர் பதிலளிக்க, போபால் என்.ஐ.ஏ அதிகாரிகள் பிரக்யா தாக்கூரின் உடல்நலன் குறித்து விசாரித்து அறிக்கையை ஏப்ரல் 9ம் தேதிக்குள் தாக்கல் செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், பாஜக எம்.பி. சாத்வி பிரக்யா, உடல்நலக் குறைவாக இருப்பதால், ஓய்வு தேவை என என்.ஐ.ஏ தாக்கல் செய்த பதிலை ஏற்காத சிறப்பு நீதிமன்றம், வரும் 22ம் தேதிக்குள் கட்டாயம் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

உடல்நிலை காரணமாக இந்த வழக்கில் ஜாமீன் பெற்ற அவர், அடிக்கடி கிரிக்கெட் மற்றும் கூடைப்பந்து விளையாடுவதும், நடனமாடும் வீடியோக்கள் வெளியாகியது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜனதாவின் "400 முழக்கம்" எதார்த்தத்தின் நேர் எதிர்: எடுத்துக்காட்டுடன் காங்கிரஸ் கிண்டல்



குஜராத், ஏப். 11

மக்களவை தேர்தலில் 400 தொகுதிகள் இலக்கு என்ற முழக்கத்துடன் பா.ஜனதா தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது. அதேவேளையில் இந்தியா கூட்டணி பா.ஜனதாவை தோற்கடிக்கும் வகையில் களம் இறங்கியுள்ளது. காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கை வெளியிட்டு பிரசாரத்தில் குதித்துள்ளது. பா.ஜனதா கட்சி தலைவர்களும் விமர்சனங்களுக்கு தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

பா.ஜனதா கூட்டணியாக 400 தொகுதிகளை கைப்பற்றுவோம், தனியாக 370 தொகுதிகளை பிடிப்போம் எனத் தெரிவித்து வரும் நிலையில், 200 தொகுதிகளை தாண்டுவீர்களா? என காங்கிரஸ் கேள்வி எழுப்பி வருகிறது.

இந்த நிலையில் பா.ஜனதாவின் 400 முழக்கம் எதார்த்தத்தின் நேர் எதிர் என காங்கிரஸ் தலைவர் ஜெய்ராம் ரமேஷ் எடுத்துக்காட்டுடன் கிண்டல் செய்துள்ளார்.

இது தொடர்பாக ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது:

பா.ஜனதா 543 தொகுதிகளில் கூட்டணியாக 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்து வருகிறது. ஆனால் இந்திய அரசியல் வரலாற்றில் ஒருமுறைதான் 400 இடங்களுக்கு அதிகமான இடங்களில் ராஜிவ் காந்தி தலைமையில் 1984ல் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

இலக்கை நிர்ணயித்து முழக்கம் வெளியிடுவது எளிது. 2017 குஜராத் தேர்தலின்போது பா.ஜனதா 150 இடங்களை வெல்வோம் என முழக்கமிட்டது. ஆனால் 99 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 2018ல் சத்தீஸ்கர் தேர்தலின்போது 50 இடங்களை வெல்வோம் என முழக்கமிட்டது. ஆனால் 15 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 2019 ஜார்கண்ட் தேர்தலின்போது 65 இடங்களை கைப்பற்றுவோம் என முழக்கமிட்டது. ஆனால் 25 இடங்களில்தான் வெற்றி பெற்றது.

2020 டெல்லி மாநில தேர்தலில் 45 இடங்களை வெல்வோம் என முழக்கப்பட்டது. ஆனால் 8 இடங்களில்தான் வெற்றி பெற்றது. 2021 தமிழ்நாடு தேர்தலில் 118 இடங்களை வெல்வோம் என முழக்கமிட்டது. ஆனால் 4 இடங்களில்தான் வெற்றி பெற்றது. இலக்கு, வெல்வோம் என முழக்கமிடுவது எளிது. ஆனால் எதார்த்தம் நேர் எதிராக உள்ளது.

இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

2024 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெறும், தனியாக பா.ஜனதா 370 இடங்களில் வெற்றி பெறும் என பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜனதா கூறி வருகிறது.

2019 தேர்தலின்பேது 300க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்தது. தற்போது அதை 400 ஆக உயர்த்தியுள்ளது. 2019 மக்களவை தேர்தலின்போது பா.ஜனதா தனியாக 303 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது, கூட்டணி கட்சிகளுடன் சேர்த்த 353 இடங்களில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# தேனி மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம்: மக்களுடன் செல்பி எடுத்து மகிழ்ச்சி

தேனி, ஏப். 11

தேனி மக்களவை தொகுதி திமுக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனை ஆதரித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தேனி உழவர் சந்தை பகுதியில் நடைபயணமாக சென்று வாக்கு சேகரித்தார். அமைச்சர் ஐ.பெரியசாமி, வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் உடன் சிறிய தேனீர் கடையில் அமர்ந்து தேனீர் அருந்தினார். தேனி மக்களவை தொகுதி திமுக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் ஆதரித்து முதல்வர் ஸ்டாலின் இன்று மாலை தேனி லட்சுமிபுரத்தில் உள்ள திடலில் நடைபெறவுள்ள பிரம்மாண்ட பொதுக்கூட்ட மேடையில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார். அதற்காக நேற்று இரவு 9 மணி அளவில் தேனிக்கு வருகை தந்த முதலமைச்சர் பழனி செட்டிபட்டியில்



உள்ள தனியார் தங்கும் விடுதியில் ஓய்வெடுத்தார். இதை தொடர்ந்து தனியார் விடுதியில் இருந்து இன்று காலை ஏழு முப்பது மணியளவில் தேனி பெரியகுளம் சாலையில் உள்ள உழவர் சந்தை நுழைவாயில் இருந்து நடை பயணமாக சென்ற தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் காய்கறி வியாபரம் செய்யும் வியாபாரியிடமும் பொதுமக்களிடையே தங்க தமிழ்ச்செல்வனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிங்கள் என்று பிரச்சாரம் மேற்கொண்டார். பொதுமக்கள் முதல்வருடன் செல்பி எடுத்தும் புகைப்படங்கள் எடுத்தும் கை கொடுத்தும் மகிழ்ந்தனர். மேலும் அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடம் பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர். உங்கள் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து தேனி பாரஸ்ட் ரோடு பகுதியில் உள்ள தேநீர் கடையில் தமிழக முதலமைச்சர் தேநீர் அருந்தினார். கூடியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மத்தியில் பாரஸ்ட் ரோட்டில் உள்ள சிறிய தேநீர் கடையில் வேட்பாளர் தங்கச்தமிழ்செல்வன், அமைச்சர் ஐ.பெரியசாமி உடன் தேநீர் அருந்தினார். உடன் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்த னர்

# ஒரு டீக்கடைக்காரராக மகிழ்கிறேன்.. நீலகிரி போனதுமே ‘டோனை’ மாற்றிய பிரதமர் மோடி: குவிந்த கைத்தட்டு

நீலகிரி, ஏப். 11

நீலகிரி மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடந்த பாஜக பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசினார். அப்போது ‘‘ அழகான தேயிலை தோட்டம் உள்ள இந்த பகுதிக்கு வந்தால் ஒரு டீக்கடைக்காரருக்கு சந்தோஷம் இருக்காதா என்ன? ’’ எனக்கூறி கவனத்தை ஈர்த்தார். வரும் லோக்சபா தேர்தலையொட்டி பிரதமர் மோடி 7 வது முறையாக 2 நாள் சுற்றுப்பயணமாக சென்னை வந்தார். சென்னையில் நேற்று மாலையில் வாகன பேரணி நடத்தி பாஜக வேட்பாளர்களுக்கு பிரதமர் மோடி



வாக்கு சேகரித்தார். அதன்பிறகு பிரதமர் மோடி தமிழ்நாட்டில் 2வது நாளாக பிரசாரம் செய்தார். இன்று காலையில் வேலூரில் நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். இதையடுத்து நீலகிரி மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பாஜக பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். பிரதமர் மோடிக்கு நிர்வாகிகள் தாமரை மலர்களால் உருவாக்கப்பட்ட மாலை அணிவித்தனர். அதன்பிறகு நீலகிரி மத்திய அமைச்சர் எல் முருகன், கோவை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, திருப்பூர் பாஜக வேட்பாளர் முருகானந்தம், பொள்ளாச்சி வசந்தராஜன், ஈரோடு தாமாக வேட்பாளர் விஜயகுமார் ஆகியோரை ஆதரித்து பிரதமர் மோடி வாக்கு சேகரித்து பேசினார். அப்போது தான் டீக்கடைக்காரராக மகிழ்கிறேன் எனக்கூறி கவனத்தை ஈர்த்தார். மேட்டுப்பாளையத்துக்கு கோவையின் ஆற்றலும், நீலகிரியின் அழகும் இருக்கிறது. அழகான தேயிலை தோட்டம் உள்ள இந்த பகுதிக்கு வந்தால் ஒரு டீக்கடைக்காரருக்கு சந்தோஷம் இருக்காதா என்ன?’ என்று தெரிவித்தார். இதனை கேட்டவுடன் அங்கிருந்த தொண்டர்கள் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர்.

# வெயிலுக்கு குட்பை.. தமிழகத்தில் இடி, மின்னலுடன் 4 நாள் மழை.. வானிலை மையம் குளு குளு அப்டேட்

சென்னை, ஏப். 11

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் அடுத்த 4 தினங்களுக்கு இடி மின்னலுடன் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இது குறித்து ஆய்வு மையம் விடுத்துள்ள அறிக்கையில், “கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது. தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 24 செல்சியஸ் குறைவாக இருந்தது.

இதர தமிழக பகுதிகள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகள் மற்றும் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை பொதுவாக இயல்பை விட 2 செல்சியஸ் அதிகமாக இருந்தது.

அதிகபட்ச வெப்பநிலை திருப்பத்தூரில் 41.6 செல்சியஸ் (106.8 டிகிரி பாரன்ஹீட்) மற்றும் ஈரோட்டில் 40.0(104 டிகிரி பாரன்ஹீட்) செல்சியஸ் பதிவாகியுள்ளது. இதர தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் 37 39” செல்சியஸ் பதிவாகியுள்ளது. தமிழக கடலோரப்பகுதிகளில் 33 37 செல்சியஸ், புதுவையில் 34.5 செல்சியஸ், காரைக்கால் பகுதியில் 33.6’ செல்சியஸ் மற்றும் மலைப்பகுதிகளில் 2230 செல்சியஸ் பதிவாகியுள்ளது. சென்னை மீனம்பாக்கத்தில் 35.1 செல்சியஸ் மற்றும் நுங்கம்பாக்கத்தில் 34.5 செல்சியஸ் பதிவாகியுள்ளது.

அடுத்த ஏழு தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பை பொறுத்த அளவில், தென் இந்தியப்பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது.. நாளை தென் தமிழகம், டெல்டா மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்.12ம் தேதியை பொறுத்த அளவில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசா னது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ஏப்.13, ஏப்.14ம் தேதி தென் தமிழகம், டெல்டா மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்.15ம் தேதி தென் தமிழக மாவட்டங்களில் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

## திரையரங்களுக்கு ஒரு நாள் விடுமுறை அறிவிப்பு

சென்னை, ஏப்.11

தேர்தலானது நடைபெற உள்ள நிலையில், அதனை முன்னிட்டு 19ஆம் தேதி தமிழகம் முழுவதும் உள்ள திரையரங்குகளுக்கு விடுமுறை அளித்து தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், எதிர்வரும் 19.04.2024 அன்று நடைபெறும் இந்திய தேர்தலை முன்னிட்டு தேர்தல் பாராளுமன்ற ஆணையம் அறிவுறுத்தியபடி தமிழகத்தில் உள்ள அனைத்து திரையரங்கம் ஊழியர்களுக்கும் அன்று 19.04.2024 அன்று விடுமுறை அளிக்கப்படுகிறது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை பாராளுமன்ற தொகுதி பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் ராமர் பாண்டி மேலவாசல் பகுதியில் பொதுமக்களிடம் யானை சின்னத்தில் வாக்களிக்க கோரி வீடுவீடாக சென்று தேர்தல் வாக்குறுதி பிரசுரங்களை வழங்கி சூறாவளி பிரச்சாரம் செய்தார்... அருகில் கட்சி நிர்வாகிகள் ஜெயராணி, பாண்டி, வீரையா, பால்பாண்டி , வீரபாண்டி உள்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள்

ஈரோடு, ஏப். 11

நாடாளுமன்ற தேர்தல் 2024ஐ முன்னிட்டு, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் 17 ஈரோடு நாடாளுமன்ற தொகுதிகளில்உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்திய தேர்தல் ஆணையத்தால், நாடாளுமன்ற பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 அன்று நடைபெறவுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு இயந்திரம் வாக்குப்பதிவு இயந்திரம் வாக்காளர் தங்கள் அளித்த வாக்கினை சரிபார்க்கும் இயந்திரம் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளமான நுஆளு போர்டல் மூலம் கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செய்யப்பட்டு கடந்த 20.03.2024 அன்று சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 09.04.2024 அன்று 17 ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 97 குமாரபாளையம், 98 ஈரோடு கிழக்கு, 99 ஈரோடு மேற்கு, 100 மொடக்குறிச்சி, 101 தாராபுரம், 102 காங்கயம் என 6 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 1688 வாக்குச்சாவடி மையங்களுக்கு 4056 வாக்குப்பதிவு இயந்திரங்கள் , 2028 கட்டுப்பாட்டு இயந்திரங்கள் , 2198 வாக்காளர் தங்கள் அளித்த வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களும் இந்திய தேர்தல் ஆணைய இணையதளத்தின் மூலம் கணினி சுழற்சி முறையில் 2ம் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 17 ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 97 குமாரபாளையம், 98 ஈரோடு கிழக்கு, 99 ரோடு மேற்கு, 100 மொடக்குறிச்சி, 101 தாராபுரம், 102 காங்கயம் என 6 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடவுள்ள வேட்பாளரது புகைப்படத்துடன் கூடிய பெயர் மற்றும் அவர்களது சின்னம் பொருத்தும் பணி, மேற்கண்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் 17 ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 98. ரோடு கிழக்கு சட்ட மன்ற தொகுதியில் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்திலும், 99.ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்திலும், 101. தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் தாராபுரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் மற்றும் 102 காங்கேயம் சட்டமன்ற தொகுதியில் முத்து பழனியப்பா வள்ளியம்மை திருமண மண்டபத்திலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளரது புகைப்படத்துடன் கூடிய பெயர் மற்றும் அவர்களது சின்னம் பொருத்தும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி விழிப்புணர்வு பணிகள்

மயிலாடுதுறை, ஏப். 11

மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் தொடர்பாக மாவட்ட கலெக்டர், தேர்தல் நடத்தும் அலுவலர் ஏ.பி.மகாபாரதி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில் நூறு சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக இளம் வாக்காளர்கள் தவறாது வாக்களிக்க வேண்டும் என்பதற்காக கல்லூரி அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வாக்காளர்களிடம் தேர்தலில் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். இம்மாவட்டத்தில் 8000 மகளிர் சுய உதவிக்குழு உள்ளனர். இதில் 1 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளனர். கடந்த தேர்தலில் இம்மாவட்டம் 73. 41 சதவீத வாக்குப்பதிவாகி உள்ளது. இச்சதவீதத்தினை உயர்த்துவதற்கு தேவையான வாக்காளர் விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட வேண்டும். 50 சதவீதத்திற்கு கீழ்; வாக்குப்பதிவாகியுள்ள வாக்குச்சாவடிகளை கண்டறிந்து அவற்றில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

வாக்களிப்பது ஒவ்வொருவரின் கடமை என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். எனவே எதிர்வரும் தேர்தலில் வாக்காளர்கள் எவ்வித அச்சுறுத்தலுக் கும்,இடமின்றி நேர்மையாக வாக்களித்து ஜனநாயக கடமையாற்ற வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

தொடர்ந்து மகளிர் குழு உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட துணி பைகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்கள்

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மணிமேகலை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தயாள விநாயக அமல்ராஜ்,மகளிர் திட்டம் திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி

தர்மபுரி, ஏப். 11

தருமபுரி மக்களவைத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நடைபெறுகிறது. தருமபுரி மற்றும் பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் கி.சாந்தி, நேரில் சென்று பார்வையிட்டார்.



மக்களவைப் பொதுத் தேர்தல் 2024க்கான வாக்குப்பதிவு வருகின்ற 19.04.2024, வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது. மக்களவைப் பொதுத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் 20.03.2024 முதல் 27.03.2024 வரை தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். அந்தவகையில், தருமபுரி மக்களவைத் தொகுதியில் 24 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தருமபுரி மக்களவைத் தொகுதிக்குட்பட்ட பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் 272 வாக்குச்சாவடிகளுக்கும், பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் 294 வாக்குச்சாவடி களுக்கும், தருமபுரி சட்டமன்ற தொகுதியில் 308 வாக்குச்சாவடிகளுக்கும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் 314 வாக்குச்சாவடிகளுக்கும், அரூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் 301 வாக்குச்சாவடிகளுக்கும், மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் 316 வாக்குச்சாவடிகளுக்கும் என மொத்தம் தருமபுரி மக்களவைத் தொகுதிக்குட்பட்ட 1805 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள 3,756 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி இன்றைய தினம் தொடங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள் நிறைவடைந்த பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் சி.சி.டி.வி கேமிரா பொறுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு அறையில் மீண்டும் வைத்து பூட்டி சீல் வைக்கப்படும். வாக்குப்பதிவின்போது தொடர்புடைய வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படும்.

மேலும், வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியில் மாதிரி வாக்குப்பதிவு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் கி.சாந்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் செ. பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தனப்பிரியா, வட்டாட்சியர்கள் பி. ஜெயசெல்வன், ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.

# தாராபுரத்தில் 2 மாதமாக கிடப்பில் போடப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள்



தாராபுரம், ஏப். 11

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சிக்குட்பட்டது குளத்து புஞ்சை தெரு. இப்பகுதியில் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி உள்ளது. தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் தங்கும் இல்லமும் உள்ளது. மேலும் இரண்டு தனியார் பள்ளிகளும் இப்பகுதியில் இயங்கி வருகின்றன. இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இங்கு மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் என்ன காரணத்தினாலோ இரண்டு மாதம் ஆகியும் இந்த பணிகள் முடிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்களும், அந்த வழியை பயன்படுத்தும் பொதுமக்களும் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்

ஆகவே சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் கிடப்பில் போடப்பட்டுள்ள அந்த பகுதி மழை நீர் வடிகால் கட்டுமான பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்புலிகள் கட்சியின் மேற்கு மண்டல துணைச் செயலாளர் ஒண்டிவீரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நாமக்கல் மாவட்டத்தில் யுகாதி பெருவிழா மணமாலை நிகழ்ச்சியில் 1100 ஜாதக பரிமாற்றங்கள் நிகழ்வு

நாமக்கல் ஏப் 11

நாமக்கல் மாவட்ட நாயுடு நல சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும், யுகாதி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு யுகாதி என்கிற தெலுங்கு வருடப் பிறப்பு விழா, 9ம் தேதி, செவ்வாய்க்கிழமை 26 ஆம் ஆண்டு விழாவாக கொண்டாடப்பட்டது.




நாமக்கல் எஸ்பிஎஸ் திருமண மண்டபத்தில் காலை 7 மணிக்கு யுகாதி விழா துவங்கியது. அதனைத் தொடர்ந்து மணமாலை நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் சுமார் 1100 மேற்பட்ட மணமகன், மணமகள் ஜாதகங்கள் பரிமாற்ற நிகழ்வுகள் நடைபெற்றது. மாலை 3 மணி முதல் ஓவியப்போட்டி, பேச்சுப் போட்டி, மாறுவேடப் போட்டி, பாட்டுப் போட்டி, நடனப்போட்டி மற்றும் மகளிருக்கான கோலப் போட்டியும் நடைபெற்றது. தொடர்ந்து, குழந்தைகளும் கைபேசியும் மற்றும் இன்றைய விவசாயம் ஆகிய தலைப்புகளில் 17 வயதுக்கு உட்பட்டோருக்கு பேச்சுப்போட்டியும், சென்ற கல்வியாண்டில் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு ஆகியவற்றில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு சிறப்பு பரிசும், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

26ம் ஆண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் இருந்து நாயுடு சமூக பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக பாண்டிச்சேரி டாக்டர் லட்சுமிபதிநாயுடு, சேலம் தனக்கொடி, கோவை அனந்தபத்மநாபன், முசிறி ராஜேந்திரன் நாயுடு, தங்கராஜ நாயுடு, தூத்துக்குடி சுந்தரராஜ், வரதராஜாநாயுடு, மேட்டூர் சம்பத் பழனிச்சாமி, ஆத்தூர் அசோகன், தர்மபுரி வெங்கடேசன் ராஜா, நாகை ஓம்சக்தி ராஜா, துறையுர் கிருஷ்ணசாமி, துறையுர் வீராசாமி, மதன், திருப்புர் கிருஷ்ணமூர்த்தி, ராசிபுரம் நகர்மன்ற தலைவர் கவிதா சங்கர், திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, எருமப்பட்டி சங்கீதா சுகுமார், ஆரணி ரமேஷ் நாயுடு, நாராயணசாமி நாயுடு, பவனி ஸ்ரீதர், கடலூர் விஜயராகவன், மதுரை ரமேஷ், நீலகிரி லட்சுமிநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை நாமக்கல் மாவட்ட நாயுடுகள் நலச்சங்க தலைவர் ஆடிட்டர் வேங்கடசுப்ரமணியன். செயலாளர் நாராயாணன், பொருளாளர் தங்கவேல், தலைமை நிலைய செயலாளர் கோவிந்தராஜ், துணைத்தலைவர் வெங்கடேசன், துணைச் செயலாளர் செல்வராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி

சேலம், ஏப். 11

சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி 2வது நாளாக சேலம், கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் முன்னிலையில் நடைபெற்றுவருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மக்களவைப் பொதுத் தேர்தல் 2024க்கான வாக்குப்பதிவு வருகின்ற 19.04.2024, வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவுள்ளது. மக்களவைப் பொதுத் தேர்தலில் போட்டியிட விருப்பமுள்ள வேட்பாளர்கள் 20.03.2024 முதல் 27.03.2024 வரை தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். அந்தவகையில், சேலம் மக்களவைத் தொகுதியில் 25 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

சேலம் மக்களவைத் தொகுதிக்கான வாக்குப்பதிவில் பயன்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கட்டுப்பாட்டுக் கருவிகள் வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் முன்னிலையில் தொடர்புடைய 6 சட்டமன்ற தொகுதிகளுக்காக சேலம், கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள இருப்பு அறையில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளது.




சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதியில் 297 வாக்குச்சாவடிகளுக்கும், சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதியில் 263 வாக்குச்சாவடிகளுக்கும், சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் 241 வாக்குச்சாவடிகளுக்கும், ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் 345 வாக்குச்சாவடிகளுக்கும், வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் 299 வாக்குச்சாவடிகளுக்கும் மற்றும் எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் 321 வாக்குச்சாவடி களுக்கும் என மொத்தம் சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட 1,766 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நேற்றைய தினம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் 2வது நாளான இன்று வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியில் 1,200 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பணிகள் அனைத்தும் நிறைவடையும். வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள் நிறைவடைந்த பின்னர் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் 24 மணிநேரமும் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் சி.சி.டிவி கேமிரா பொறுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு அறையில் மீண்டும் வைத்து பூட்டி சீல் வைக்கப்படும். வாக்குப்பதிவின் போது தொடர்புடைய வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்படும்.

இந்நிகழ்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மாவட்ட வருவாய் அலுவலர் பெ. மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி மக்களவை தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு

அரியலூர், ஏப். 11

அரியலூர் மாவட்டம், சிதம்பரம் பாராளுமன்ற தொகுதிகுட்பட்ட 150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, உடையார்பாளையம் வட்டம், பிராஞ்சேரி, மலங்கன் குடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் இருளர் இன மக்களிடையே நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி நடைபெறவுள்ள சிதம்பரம் பாராளுமன்ற தொகுதிக்கான மக்களவைத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.




அதன் தொடர்ச்சியாக சிதம்பரம் பாராளுமன்ற தொகுதிகுட்பட்ட, 150 ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, உடையார்பாளைம் வட்டம் பிராஞ்சேரி, மலங்கன் குடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் இருளர் இன மக்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், எனது ஓட்டு எனது பெருமை ( 19) என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, மற்றும் தேர்தல் விழிப்புணர்வு அலுவலர் ராமலிங்கம், கிராம நிர்வாக அலுவலர்கள், வட்ட வழங்கல் அலுவலர், உடையார்பாளையம் ஆதிதிராவிட நல அலுவலக தனி வருவாய் ஆய்வாளர், 50 இருளர் இன மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட கலெக்டர் தலைமையில் திருநங்கைகள் பங்கு பெற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி




நாமக்கல், ஏப். 11

நாமக்கல் நகராட்சி பூங்கா சாலையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ச.உமா, தலைமையில், தேர்தல் பொதுப்பார்வையாளர் ஹர்குன் ஜித் கெளர், முன்னிலையில், மக்களவை பொதுத்தேர்தல் 2024 முன்னிட்டு 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி திருநங்கைகள் பங்கு பெற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

மக்களவை பொதுத்தேர்தல் 2024ல் 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்திடும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் நாளான ஏப்ரல் 19 (வெள்ளிக்கிழமை) அன்று வாக்களிக்க தகுதியுடைய அனைவரும் 100 சதவிகிதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 100க்கும் மேற்பட்ட திருநங்கைகள் கலந்து கொண்டு பேரணியாக சென்று பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். மேலும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உடைய இந்திய குடிமக்களாகிய நாங்கள் எந்த ஒரு ஜாதி, மதம், இனம், வகுப்பு மற்றும் மொழி பாகுபாட்டிற்கும் ஆட்படாமல் எதிர்வரும் மக்களவை பொது தேர்தலில் வாக்களிப்பேன் என உளமார உறுதி கூறுகிறேன் எனும் வாக்காளர் உறுதிமொழியினை திருநங்கைகள் அனைவரும் ஏற்று கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, மாவட்ட சமூக நல அலுவலர் தி.காயத்திரி, துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் நாடாளுமன்ற தேர்தல் 2024 வாக்குப்பதிவு எந்திரத்தில் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர் பெயர் மற்றும் சின்னங்கலை பொருத்தும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர், கலெக்டர் சங்கீதா பார்வையிட்டார். உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி உடன் உள்ளார்.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் தேர்தல் குறித்து ஆலோசனை கூட்டம்



செங்கல்பட்டு, ஏப். 11

வாக்குப்பதிவு மையங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை வசதிகளான சரிவு பாதை வசதி, மின்விசிறி, பழுதடைந்த கதவு மற்றும் ஜன்னல் மாற்றம் செய்தல், குடிநீர் வசதி, தரைதளம் சரி செய்தல் மற்றும் ஆதிதிராவிடர் பள்ளிகளில் வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் தேவைப்படும் வசதிகள் குறித்தும், நகராட்சி பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி பள்ளிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த வேண்டும். மேலும் செங்கல்பட்டு தொகுதி 443, செய்யூர் தொகுதி 263, மதுராந்தகம் தொகுதி274, சோழிங்கநல்லூர் தொகுதி 663, தாம்பரம் தொகுதி 427, பல்லாவரம் தொகுதி437, திருப்போரூர் தொகுதி330 ஆகிய வாக்குப்பதிவு மையங்கள் உள்ளன. இதில், மின்விளக்கு, மின்விசிறி போன்ற அடிப்படை வசதிகளை சரி செய்யுமாறு பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு விரைந்து முடிக்குமாறு மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டார். மேலும் வாக்குப் பதிவு செய்ய வரும் பொது மக்களுக்கு மாநகராட்சி மூலம் பந்தல், டேபிள், நாற்காலி, குடிநீர் வசதி போன்றவை ஏற்பாட செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், வாக்குப் பதிவு மையங்களில் கழிவறை வசதி இருக்குமாறு பார்த்தக் கொள்ளவேண்டும். வாக்குப்பதிவு மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி வரப்பெற்றுள்ளதா என உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். தனியார் பள்ளிகளில் வாக்குப்பதிவு மையத்தில் நகராட்சி மூலம் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுபா நந்தினி, வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்

# உலக சுகாதார தினத்தை முன்னிட்டு கம்பம் அரசு மருத்துவமனை மருத்துவ முகாம்



கம்பம், ஏப். 11

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு தேனி மாவட்டம் கம்பம் அரசு மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது.

இதில் தலைமை மருத்துவர் பொன்னரசன் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். அன்பு அறம் செய் நிறுவனர் அன்பு ராஜா சமையல் கூடத்தில் பணிபுரியும் நபர்களுக்கு ஏப்ரன் வழங்கியும், குழந்தைகள் வார்டில் குழந்தைகளுக்கான பாதுகாப்பில் சுகாதாரத்தை பற்றி எடுத்துக் கூறியும், கோடை வெயில் காலத்தில் ஆடை அணியும் முறை பற்றி எடுத்துக் கூறி ஆடைகள் வழங்கப்பட்டது.

மேலும் மருத்துவமனை வளாகத்தில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி உறுப்பினர்கள் சார்பாக இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பிறந்த தினம் மற்றும் உலக சுகாதார தினத்தை முன்னிட்டு நவநீதி சஞ்ஜீவி, குருதி தியாகராஜன், டெய்லர் முத்தையா, மருத்துவர் பர்வீன் பேகம், சித்த மருத்துவர் சொர்ண பாரதி, செவிலியர் ராஜாத்தி, ஞானவேலம்மாள், வடிவேல், விக்னேஷ், கனகராஜ், முருகன், சிவக்குமார் ஆகியோர் இணைந்து நாவல் பழ மரக்கன்று நடவு செய்யப்பட்டது.

# சேலத்தில் தேசிய தெலுங்கர் சிறுபானமையினர் கோரிக்கை

சேலம், ஏப். 11

சேலம் மாவட்டம் தேசிய தெலுங்கர் சிறுபானமையினர் சமூக கூட்டமைப்பு சமூக ஆர்ய வைஸ்ய முன்னேற்ற பேரவை, மாநிலத்தலைவர் நாகா ஆர்.அரவிந்தன் ஒரு தனியார் ஹோட்டலில் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு தமிழகத்தில் 25 சதவீதம் பேர் உள்ளோம் இதில் 48 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது எங்கள் ஆதரவு இருந்தால் அந்தக் கூட்டணி வெற்றி பெறும் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான வெற்றிக் கூட்டணிக்கு முழு ஆதரவு தருவது.வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் வாக்கு சேகரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபடுவது.

தி.மு.க.கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரை நேரில் சந்தித்து கூட்டமைப்பு முழு ஆதரவு அளிக்கும் என்று கூறி சில கோரிக்கைகளையும் முன்வைத்ததுதெலுங்கு மொழி பேசும் மக்களுக்கு அனைத்து மாநிலங்களில் நல வாரியம் உள்ளது போல் தமிழகத்திலும் நல வாரியம் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் 10% இட ஒதுக்கீடு விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆர்ய வைஸ்ய சமூக மக்களின் குல தெய்வமான வாசவி கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானங்கள் அரசு கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் தமிழக அரசின் சலுகைகளை தெலுங்கு மொழி பேசும் மக்களுக்கு விரைவில் கிடைத்திட வழி வகை செய்ய வேண்டும் என இந்த 4 கோரிக்கைகளை வைத்தார். உடன் மக்கள் சட்ட உரிமைகள் கழகம் முரளிதரன் மாநில இளைஞரணி அமைப்பாளர் ஆர்.வி.பாபு ஆகியோர் இந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர்

# குடிதண்ணீர் கேட்டு பொதுமக்கள் போராட்டம்




மேலூர் ஏப்.11.

மதுரை மாவட்டம் மேலூர் நகராட்சிகுட்பட்ட கருத்தபுலியம்பட்டி 25 வார்டில் தொடர்ந்து நான்கு நாட்களாக தண்ணீர் வரவில்லை என்று அந்த வார்டை சேர்ந்த பொது மக்கள் நேற்று காலை 8.30முப்பது மணியளவில் மேலூர் திருவாதவூர் சாலையில் பெண்கள் மற்றும் ஆண்கள் என 150க்கும் மேற்பட்டோர் காலிக் குடங்களுடன் சாலை நடுவே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேல் நீடித்த போராட்டத்தால் பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் பேருந்துகளில் செல்ல முடியாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகினர். இந்த பொது மக்களின் போராட்டத்தை அறிந்த காவல் துறையினர் மற்றும் நகராட்சி சேர்மன் முகமது யாசின், நகராட்சி நிர்வாகத்தினர் பொதுமக்களிடம் உங்களுக்கு தேவையானதை உடனே செய்து தருகிறோம் என்று பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்தனர். அவர்களின் சமரசத்தை ஏற்று பொதுமக்கள் கலைந்து சென்றனர். அதன் பின்னர் பேருந்து பயணிகள் நிம்மதியடைந்து சென்றனர்.

# பாளையங்கோட்டை தலைமை அஞ்சலகம் முன்பு தேர்தல் விழிப்புணர்வு ஊர்வலம்




நெல்லை, ஏப். 11

செந்தில் குமார், முதுநிலை அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர், திருநெல்வேலி கோட்டம் முன்னிலையில் 09.04.2024 அன்று காலை 0730 மணியளவில் நடைபெற்றது. இதனை தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ் ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

தேர்தல் விழிப்புணர்வு ஊர்வலம் பாளை தலைமை அஞ்சலகத்தில் தொடங்கி பெருமாள் கீழ ரத வீதி, வடக்கு ரத வீதி, மேலரத வீதி தெற்கு பஜார் வழியாக நடைபெற்றது. இந்திய அஞ்சல் துறை இந்திய தேர்தல் ஆணையத்துடன் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் படி முறையான வாக்களார் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக வாக்காளர்கள் அனைவரும் தவறாது மக்களவை தேர்தல் 2024 யில் வாக்களிக்கவும் மேலும் வாக்களிப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமை மற்றும் உரிமை என்பதை விளக்கும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

இதில் உதவி கோட்ட அஞ்சலக கண் காணிப்பாளர்கள் பாலாஜி, குமரன், சண்முகபிரியா, தலைமை அஞ்சலக அதிகாரிகள் . ராமச்சந்திரன், . விக்டோரியா மற்றும் 200 க்கும் மேற்பட்ட அஞ்சல் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். தேர்தல் விழிப்புணர்வு ஊர்வலத்திற்கான ஏற்பாடுகளை மக்கள் தொடர்பு அதிகாரி கனக சபாபதி செய்தார்கள்

# இராஜபாளையம் ஏ.கே.டி.ஆர் கல்லூரியில் வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி: மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது




விருதுநகர், ஏப். 11

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் ஏ.கே.டி.ஆர் கல்லூரியில் மக்களவைத் தேர்தல் 2024 முன்னிட்டு, 100 சதவிகிதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி நடைபெற்ற முதல்முறை மற்றும் இளம் வாக்காளர்களுடனான விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் தலைமையில் கலந்து கொண்ட முதல் முறை மற்றும் இளம் வாக்காளர்கள் அனைவரும் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது: ஜனநாயகத்தில் வாக்குரிமை என்பது மிக முக்கியமானது.

அந்த உரிமை இன்று எல்லாருக்கும் கிடைத்திருக்கிறது.

அதை நாம் கவனத்தோடும் முழுமையாகவும் பதிவு செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்கூறும் நோக்கத்துடன் தான் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்திய ஜனநாயக தேர்தலில் பணம் பரிசுப் பொருள்கள் பெற்று வாக்குகளை பெறுவது, வன்முறை சூழல்களை ஏற்படுத்தி மக்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது, தவறான தகவல்களை பரப்புவது போன்ற மூன்று சவால்களை இந்திய தேர்தல் ஆணையம் எதிர்கொள்கிறது. இந்த சவால்கள் குறித்து இளைஞர்கள், மாணவர்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது தேர்தல் ஆணையத்தின் நடைமுறை. நம்மை ஆளக் கூடியவர்கள் பற்றியும், தேர்தல் நடைமுறைகள் என்ன என்பதை குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும். தற்போது வாக்களிப்பதற்கு 18 வயது பூர்த்தி அடைந்தால் போதும் என்ற தகுதி மட்டுமே உள்ளது.

ஆனால் நூறு வருடத்திற்கு முன் நடந்த தேர்தலில் எல்லோருக்குமான வாக்குரிமை இல்லை. வருமான வரி செலுத்துவோர் போன்ற குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே இருந்தது.

பெண்களுக்கான ஓட்டுரிமையும் பிற்காலத்தில் தான் கிடைக்கப்பெற்றது. கடந்த தேர்தலில் இந்தியா முழுவதும் பெற்ற வாக்கு சதவீதம் 68 விழுக்காடு. தமிழ்நாட்டில் கடந்த சில தேர்தல்களில் சுமார் 71 விழுக்காடு வாக்குப்பதிவு நடைபெற்று உள்ளது. நான்கில் ஒரு நபர் வாக்கு அளிப்பதில்லை.

இன்று நமக்கு நிறைய தகவல்கள் கிடைக்கின்றன. அதில் எது சரி எது தவறு என்பதை புரிந்து கொள்வது இந்த தலைமுறைக்கான மிகப் பெரிய பிரச்சினையாக கூறப்படுகிறது. அவ்வாறு கிடைக்கப்பெறும் தகவல்களின் உண்மைத்தன்மை குறித்து ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். ஜனநாயகத்தில் வாக்குரிமை என்பது மிக முக்கியமானது. ஜனநாயக நாட்டில் நாம் எந்த ஒரு மாற்றத்தையும் ஜனநாயக வழியில் தான் ஏற்படுத்த முடியும். வேட்பாளர்களுடைய விவரங்களை அறிந்து கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு வேட்பாளரும் வேட்பு மனு தாக்கலின் போது படிவம் 26 தாக்கல் செய்து விடுவார்கள். அவருடைய கல்வி தகுதி, சொத்து விவரம், குற்றப் பின்னணிஉள்ளிட்ட அனைத்து விவரங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை இணையதளம்; மூலம் எளிதாக அறிந்து கொள்ளலாம். ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பாக எவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றோமோ அவற்றையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில், இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நிறைய தகவல்கள் வருகின்றன. அந்த தகவல்களில் எது சரி என்பதை நாம் சற்று தேர்ந்த பார்வையோடு பார்க்க வேண்டியது மிகவும் முக்கியம். நீங்கள் தெளிவான பார்வையுடன் சற்று முயற்சி செய்தால் தெளிவான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். மாணவர்கள் முதலில் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய வேண்டும். மாணவர்கள் யாருக்கு எதற்காக வாக்களிக்கிறோம் என்று நன்கு அறிந்து வாக்களிக்க வேண்டும்.

பணம், பொருள் எதுவும் பெறாமல் யார் தகுதியானவர்கள் என்று அறிந்து வாக்களிக்க வேண்டும்.வாக்களிப்பதன் அவசியத்தை தங்களது பெற்றோர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில் உள்ளவர்களிடம் எடுத்துக்கூறி, தகுதியான நேர்மையான நபர்களுக்கு வாக்களிக்க தூண்டுகோலாக இருந்து ஒரு வலுவான ஜனநாயகம் உருவாவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், மாவட்ட கலெக்டர் தலைமையில் 100 கி.மீ. தூரம் நடைபயண பேரணி



தேனி, ஏப்.11

33.தேனி பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு, அனைவரும் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் 100 கி.மீ. தேர்தல் விழிப்புணர்வு நடைபயண பேரணி தொடங்கி 31 கி.மீ. தூரம் எட்டியது.

33.தேனி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 100% வாக்களிப்பை பதிவு செய்வதற்காக பல்வேறு விதமான விழிப்புணர்வு பணிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, ஒவ்வொரு நாளும் 7 முதல் 10 கி.மீ வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபயண பேரணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, முதல் நாள் தேனி அல்லிநகரம் நகராட்சி பகுதியில் 8 கி.மீ தூரமும், இரண்டாம் நாள் பெரியகுளம் நகரப் பகுதியில் 7 கி.மீ தூரமும், மூன்றாம் நாள் உத்தமபாளைம் பகுதியில் 8 கி.மீ தூரமும், விழிப்புணர்வு நடைபயண பேரணி நடைபெற்றது.

நான்காம் நாளாக இன்று போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் 8 கி.மீ தூரம் விழிப்புணர்வு நடைபயண பேரணி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் தலைமையில் நடைபெற்றது.

இப்பேரணி போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் கட்டபொம்மன் சிலையில் தொடங்கி, போஜன் பார்க், வ.உ.சி. சிலை, கருப்புசாமி கோயில் தெரு, தேவாரம் பிரதான சாலை, ஸ்டேட் பேங்க் சாலை, புதுகாலனி, சுப்புராஜ் நகர், இரயில் நிலையம், அரசு மருத்துவமனை வழியாக சென்று போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகம் வரை சென்று நிறைவு பெற்றது.

இப்பேரணி நாளை ஆண்டிபட்டி, நாளை மறுநாள் பழனிசெட்டிபட்டி, கூடலூர், சின்னமனூர், கம்பம் நகராட்சி பகுதிகளிலும், க.மயிலாடும்பாறை பகுதியில் 17.04.2024 அன்று நடைபயண பேரணி நிறைவு பெற உள்ளது.

இப்பேரணியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி, மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு முதன்மை அலுவலர் ரூபன் சங்கர் ராஜ், போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் ஜி.ராஜலெட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பிரேமலு ஓ.டி.டி. ரிலீஸ் அப்டேட் வெளியானது



தென்னிந்தியா முழுவதும் பெரும் வரவேற்பை பெற்று பிளாக்பஸ்டர் திரைப்படமான "பிரேமலு" ஏப்ரல் 12 ஆம் தேதி டிஸ்னி+ ஹாட்ஸ்டாரில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. தமிழ் மொழி மட்டுமின்றி மலையாளம் மற்றும் இந்தி மொழிகளிலும்இந்தபடம்டிஸ்னி+ஹாட்ஸ்டாரில் வெளியாகவுள்ளது.

கிரிஷ் ஏ.டி. இயக்கத்தில் உருவான இந்த படத்தில், நஸ்லென் மற்றும் மமிதா பைஜூ ஆகியோர் முதன்மைப் பாத்திரங்களில் நடித்துள்ளனர். கிரீஷ் மற்றும் கிரண் ஜோசி இணைந்து எழுதியுள்ள இப்படத்திற்கு அஜ்மல் சாபு ஒளிப்பதிவு செய்துள்ளார். விஷ்ணு விஜய் இசையமைக்க, ஆகாஷ் ஜோசப் வர்கீஸ் படத்தொகுப்பாளராக பணியாற்றியுள்ளார். பாவனா ஸ்டுடியோஸ் சார்பில் ஃபஹத் பாசில், திலீஷ் போத்தன், சியாம் புஷ்கரன் ஆகியோர் இப்படத்தைத் தயாரித்துள்ளனர்.

# நடப்பவை எல்லாம் நன்மைக்கே விஷ்ணு விஷாலுக்கு பதிலளித்த சூரி



கடந்த 2020 ஆம் ஆண்டு விஷ்ணு விஷாலின் அப்பாவான ரமேஷ் குடவாலா மீது 2.7 கோடி ரூபாய் நில மோசடி வழக்கைத் தொடுத்தார் நடிகர் சூரி. ரமேஷ் குடவாலா தமிழ்நாட்டின் முன்னள் டிஜிபி என்பது குறிப்பிடத்தக்கது.

விஷ்ணு விஷால் மற்றும் சூரி இணைந்து இதுவரை 7 படங்களில் ஒன்றாக நடித்துள்ளனர். இருவருக்குமான பிரச்சனை நீண்ட நாட்களாக நடந்துக் கொண்டு இருக்கிறது. சமீபத்தில் விஷ்ணு விஷால் நடித்த லால் சலாம் படம் வெளியானது அப்போது நடந்த நேர்காணலில் இந்த பிரச்சனை குறித்து நானும் சூரியும் பேசிக் கொண்டுதான் இருக்கிறோம் என்று கூறினார்.

இப்பொழுது அதிர்ச்சி அளிக்கும் வகையில் விஷ்ணு விஷால், சூரி மற்றும் ரமேஷ் ஆகியோர் இணைந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தை விஷ்ணு விஷால் அவரின் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், நேரம் தான் எல்லாவற்றிற்கும் மற்றும் அனைவருக்கும் பதில், லவ் யூ அப்பா என பதிவிட்டுள்ளார்.

அப்பதிவினைநடிகர்சூரிநடப்பவைஎல்லாம்நன்மைக்கேஎன்றதலைப்பில்அவரின்எக்ஸ்பக்கத்தில்பதிவிட்டுள்ளார்.

# கவனம் ஈர்க்கும் நாகபந்தம் டீசர் வீடியோ




கூத்தாச்சாரி மற்றும் டெவில்: தி பிரிட்டிஷ் சீக்ரெட் ஏஜென்ட் போன்ற பிளாக்பஸ்டர் படங்களைத் தயாரித்தவர் அபிஷேக் நாமா. தற்போது இவர் தனது அபிஷேக் பிக்சர்ஸ்இன் "புரொடக்சன் 9" ஆக உருவாகும் படத்தை, தண்டர் ஸ்டுடியோஸ் சார்பில் மதுசூதன் ராவ் உடன் இணைந்து தயாரிக்கிறார்.

உகாதியை முன்னிட்டு அபிஷேக் பிக்சர்ஸ்இன் புதிய படத்தின் தலைப்பு வீடியோ மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இப்படத்திற்குநாகபந்தம் தி சீக்ரெட் ட்ரெஷர் என்று தலைப்பிடப்பட்டு உள்ளது.

கே.ஜி.எப். புகழ் அவினாஷ் நடிப்பில், மர்மமான அகோரி கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தும் வீடியோ ரசிகர்களுக்கு அற்புத அனுபவத்தை வழங்குகிறது. இப்படத்திற்கு சௌந்தர் ராஜன் ஒளிப்பதிவு செய்ய, அபே இசையமைப்பாளராக பணியாற்றுகிறார்.

ஸ்ரீகாந்த் விசா வசனம் எழுதியுள்ளார், சந்தோஷ் காமிரெட்டி படத்தொகுப்பாளராக பணியாற்றுகிறார். காந்தி நதிகுடிகார் தயாரிப்பு வடிவமைப்பாளராக பணியாற்றுகிறார். நாகபந்தம் ஒரு பான் இந்தியா திரைப்படமாகும், இது 2025 ஆம் ஆண்டில், தெலுங்கு, இந்தி, தமிழ், கன்னடம் மற்றும் மலையாளம் மொழிகளில் வெளியாக இருக்கிறது.

# டியர் படத்தின் அடுத்தப் பாடல் வெளியாகியது




இயக்குநர் ஆனந்த் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் டியர். இந்த படத்தில் ஜி.வி.பிரகாஷ் குமார் மற்றும் ஐஸ்வர்யா ராஜேஷ் இணைந்து நடித்துள்ளனர்.

இந்த படம் ஏப்ரல் 11 ஆம் தேதி திரைக்கு வரவிருக்கிறது. இப்படத்தில் ஜி.வி. பிரகாஷ் குமார், ஐஸ்வர்யா ராஜேஷ் ஆகியோருடன், காளி வெங்கட், இளவரசு, ரோகிணி, தலைவாசல் விஜய், கீதா கைலாசம், அப்துல் லீ, 'ப்ளாக் ஷீப்' நந்தினி மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ஜெகதீஸ் சுந்தரமூர்த்தி ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். ருகேஷ் படத்தொகுப்பையும், பிரகதீஸ்வரன் கலை இயக்கப் பணிகளையும், அனுஷா மீனாட்சி ஆடை வடிவமைப்பை கவனித்துள்ளார்.

படத்தின்ப்ரோமோஷன்வேலைகள்தீவிரமாகநடந்துக்கொண்டு இருக்கிறது. தினமும் எக்ஸ் பக்கத்தில் ஜி.வி பிரகாஷ் மற்றும் ஐஷ்வர்யா ராஜேஷ் இருவரும் இணைந்து ப்ரொமோஷனல் வீடியோ வெளியிடுகின்றனர்.

கடந்த வாரம் படத்தின் பாடலான மஜா வெட்டிங் பாடல் யூ டியூபில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. நான்கு நாட்கள் முன் படத்தின் டிரெயிலர் வெளியான நிலையில் இப்பொழுது படத்தின் அடுத்த பாடலான ஸ்லீப்பிங் பியூட்டி பாடலின் லிரிக் வீடியோ யூடியூபில் வெளியாகிவுள்ளது.

# நாகேஷ் பேரன் கதாநாயகனாக அறிமுகமாகும் வானரன்

பகல் வேஷம் என்னும் கலையை பின் தொடரும் ஆஞ்சநேயர் வேடம் அணிபவர்களின் வாழ்வியலையும் தந்தை மகள் உறவை சொல்லும் கதைகளத்தையும் கொண்டு உருவாகி உள்ள படம்தான் வானரன் என்கிறார் ஸ்ரீராம் பத்மநாபன்.

பரபரப்பாக பேசப்பட்ட" டூ "எனும் படத்தை இயக்கியவரான ஸ்ரீராம் பத்மநாபன் கதை திரைக்கதை வசனம் எழுதி இப்படத்தை இயக்கியுள்ளார் . ஆரஞ்ச் பிக்சர்ஸ் சார்பில் ராஜேஷ் பத்மநாபன் மற்றும் சுஜாதா ராஜேஷ் தயாரித்திருக்கிறார்கள்

சந்தானம் நடித்த சர்வர் சுந்தரம், பிரபுதேவா நடித்த பொன் மாணிக்கவேல் ஆகிய படங்களில் நடித்த நாகேஷ் பேரன் பிஜேஷ் நாகேஷ் கதாநாயகனாக அறிமுகமாகியுள்ளார். அக்ஷயா கதாநாயகியாக நடிக்க லொள்ளு சபா ஜீவா, தீபா சங்கர், ஆதேஷ் பாலா, நாஞ்சில் விஜயன், எஸ்.எல் பாலாஜி, பேபி வர்ஷா, வெங்கட்ராஜ் , சிவகுரு, ராம்ராஜ், வெடிக்கண்ணன், மேடை கலைஞர்களான நாமக்கல் விஜயகாந்த், ஜூனியர் டி.ஆர் ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ஒளிப்பதிவு நிரன் சந்தர் மேற்கொண்டுள்ளார்.

இப்படத்திற்கு ஷாஜஹான் இசையமைத்துள்ளார். படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் அதன் சுற்றியுள்ள இடங்களிலும் 30 நாட்களில் திட்டமிட்டப்படி ஒரே கட்ட படப்பிடிப்பாக நடைபெற்று முடிவடைந்தது. இதன் நிறைவு கட்ட பணிகள் முடிவடைந்த நிலையில் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி பரபரப்பாகி வருகிறது.




# ஷஷாங்க் சிங் அசுதோஷ் சர்மா போராட்டம் வீண் 2 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியது ஐதராபாத்



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் 23வது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படிஐதராபாத்அணியில்தொடக்கவீரர்களாக டிராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் ஷர்மா களமிறங்கினர். ஹெட் 21 மற்றும் 16 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்துவந்த ஏய்டன் மார்க்ரம் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிக்கொடுத்த சன்ரைசர்ஸ் அணிக்கு நிதிஷ் குமார் ரெட்டி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை சரிவில் இருந்து மீட்டார். இவர் 64 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இம்பேக்ட் வீரராக களமிறங்கிய ராகுல் திரிபாதி 11 ரன்களிலும் கிளாசன் 9 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அப்துல் சமத் சிறப்பாக ஆடி 25 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 182 ரன்களை குவித்துள்ளது. பஞ்சாப் தரப்பில் சிறப்பாகபந்துவீசியஅர்தீப்சிங் 4 விக்கெட்டுகளையும், ஹர்ஷல்பட்டேல்மற்றும்சாம்கர்ரன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந்தது. தொடக்க வீரர் பேர்ஸ்டோவ் 0, பிரப்சிம்ரன் சிங் 4, தவான் 14 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து ராசா சாம் கரண் நிதானமாக விளையாடி ரன்களை சேர்த்தனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாம் கரண் 29 ரன்னில் வெளியேறினார். அடுத்த சிறிது நேரத்தில் ராசா 28 ரன்னில் அவுட் ஆனார். இதனையடுத்து ஷஷாங்க் சிங் அசுதோஷ் சர்மா ஜோடி சேர்ந்து அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். பரப்பரப்பாக சென்ற இந்த போட்டியில் 2 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் துரதிஷ்டவசமாக தோல்வியை தழுவியது. ஷஷாங்க் சிங் 46 ரன்னிலும் அசுதோஷ் சர்மா 33 ரன்னிலும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐதராபாத் அணி தரப்பில் புவனேஸ்வர் குமார் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

# ஐபிஎல் 2024: பஞ்சாபிற்கு 183 ரன்களை இலக்காக நிர்ணயித்தது சன்ரைசர்ஸ் ஐதராபாத்



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் 23 ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது. சன்ரைசர்ஸ் அணிக்கு துவக்க வீரர்களாக களமிறங்கிய டிராவிஸ் ஹெட் மற்றும் அபிஷேக் ஷர்மா முறையே 21 மற்றும் 16 ரன்களில் ஆட்டமிழந்தனர். அடுத்துவந்த ஏய்டன் மார்க்ரம் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிக்கொடுத்த சன்ரைசர்ஸ் அணிக்கு நிதிஷ் குமார் ரெட்டி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை சரிவில் இருந்து மீட்டார். இவர் 64 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். இம்பேக்ட் வீரராக களமிறங்கிய ராகுல் திரிபாதி 11 ரன்களிலும் கிளாசன் 9 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த அப்துல் சமத் சிறப்பாக ஆடி 25 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். போட்டி முடிவில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 9 விக்கெட்டுகளை இழந்து 182 ரன்களை குவித்துள்ளது. பஞ்சாப் சார்பில் சிறப்பாக பந்துவீசிய அர்தீப் சிங் 4 விக்கெட்டுகளையும், ஹர்ஷல் பட்டேல் மற்றும் சாம் கர்ரன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். ரபாடா 1 விக்கெட் வீழ்த்தினார்.

# டி20 உலகக்கோப்பை: ஆச்சர்யம் அளிக்கும் வகையில் இந்திய அணி தேர்வு இருக்க வாய்ப்பில்லை



ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்கள் இந்திய அணியில் இடம் பிடிக்க வாய்ப்புள்ளதாக கருதப்பட்டது.

விராட் கோலி சேர்க்கப்படுவாரா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால் அவர் அணியில் தனக்கான இடத்தை உறுதி செய்துள்ளதாக தெரிகிறது.

டி20 உலகக்கோபை ஜூன் மாதம் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெற இருக்கிறது. இதற்கான இந்திய அணி மே மாதத்தின் முதல் வாரத்தில் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. தற்போது ஐபிஎல் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் முடிந்த கையோடு உலகக் கோப்பை வருவதால் ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்கள் இந்திய அணியில் இடம் பிடிக்க வாய்ப்புள்ளதாக கருதப்பட்டது.

ஆனால் மிகப்பெரிய அளவில் ஆச்சர்யம் அளிக்கும் வகையில் இந்திய அணியில் புதுமுகங்களுக்கு வாய்ப்பு இருக்காது கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். விராட் கோலி சேர்க்கப்படுவாரா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால் அவர் அணியில் தனக்கான இடத்தை உறுதி செய்துள்ளதாக தெரிகிறது.

காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ள ரிஷப் பண்ட் அணியில் இணைவதற்கு தயாராகி வருகிறார். ரோகித் சர்மா, ஜெய்ஸ்வால், விராட் கோலி ஆகியோர் டாப் 3 பேட்ஸ்மேன்களாக தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள்.

சூர்யகுமார் யாதவ் மற்றும் ரிங்கு சிங்கிற்கு இடம் உறுதி என்பதில் சந்தேகம் இருக்காது.

அதிவேகமாக பந்து வீசும் மயங்க் யாதவ் தேர்வாளர்கள் மனதில் இடம் பெறலாம். வேகப்பந்து வீச்சுக்கான இடத்தை பும்ரா, சிராஜ் மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோர் இடம் பிடிக்கலாம்.

# சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் ஹசராங்காவிற்குப் பதிலாக ஜாஃப்னா வீரர்



சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் இலங்கையின் வணிந்து ஹசரங்கா இடம் பிடித்திருந்தார். இவர் ஐபிஎல் போட்டியின் தொடக்கத்தில் அணியில் இணைவது தாமதமாகி வந்தது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை காயம் காரணமாக ஐபிஎல் தொடர் முழுவதிலும் இருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவருக்குப் பதிலாக 22 வயது இளம் வீரரான மற்றொரு இலங்கை வீரரான விஜயகாந்த் வியாஸ்காந்த் மாற்று வீரரான ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணியில் இணைந்துள்ளார். இவர் ஒரேயொரு டி20 போட்டியில் இலங்கை அணிக்காக விளையாடியுள்ளார்.

லங்கா பிரீமியர் லீக்கில் ஜாஃப்னா ஸ்டாலியன்ஸ் அணிக்காகதனது18வயதில்2020ம்ஆண்டுவிளையாடினார். 30வருடத்திற்குப்பிறகுஇலங்கையின்வடக்குப்பகுதியான ஜாஃப்னா பகுதியில் இருந்து வந்த முதல் வீரர் ஆவார்.

கடந்தஐபிஎல்தொடரின்போதுகுமார்சங்கக்கராஇவரை ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு நெட் பவுலராக கொண்டு வந்தார். தற்போது முத்தையா முரளீதரன் அவரை ஐபிஎல் அணிக்கு கொண்டு வந்துள்ளார். வங்காளதேசம் பிரீமியர் லீக்கிலும் விளையாடியுள்ளார். மொத்தமாக 33 டி20 போட்டியில்விளையாடி42விக்கெட்டுகள்வீழ்த்தியுள்ளார். இவர் ரிஸ்ட் லெக் ஸ்பின்னர் ஆவார்.



காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு

விளக்கம்:
அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.